# வள்ளியம்மானையில் அணிப்பிரயோகம் – ஓர் ஆய்வு

சிவராசா ஓசாநிதி
*ஆராய்ச்சிஉதவியாளர்*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*
*இலங்கை.*

ஆய்வுச்சுருக்கம்.

மட்டக்களப்புப்பிரதேச மக்கள் மத்தியில் பாரம்பரியமாக ஏட்டுச்சுவடிகள் பேணப்பட்டுவருகின்றன. அவ்வாறான தொருஏட்டுச்சுவடாக இவ்வள்ளியம்மானை காணப்படுகின்றது. இது முருகக்கடவுள்வள்ளியம் மானையைத் திருமணம் செய்தகதையைக் கூறுகின்றது. மட்டக்களப்புச் சித்தாண்டியில் இவ்வள்ளியம்மனை மக்களால் காவியமாகப் பேணப்பட்டு வருகின்றது. முருகன் அரக்கர்களை அழித்துப்போர் புரிந்த வேளையில் வள்ளிமுருகன் அழகில் மயங்கி அவரைத்திருமணம் செய்ய ஆசை கொண்டு தவம்புரிகிறாள். அப்போதுமுருகன் 'இப்பிறப்பில்தான் தெய்வயானையைத் திருமணம் செய்திருப்பதால் அடுத்தபிறவியில் உன்னைத்திருமணம் செய்வேன்' என உறுதியளிக்கிறார். அதன் படி வள்ளி மறு பிறப்பில் மானின் குழந்தையாகப் பிறப்பெடுக்கிறாள். வள்ளியை வேடர்கள் தங்கள் குழந்தையாக வளர்க்கின்றனர். வள்ளி பெண்ணாகவளர்ந்ததும் தினைப்புனம் காவல்காக்கின்றாள். அவ்வேளை முருகன் கிழவனாகவடிவம் கொண்டு இறுதியில் வள்ளியைத் திருமணம் செய்கிறார். இக்கதையை புலவர் சிறந்த அணிகளின் வாயிலாகப் வெளிப்படுத்தியுள்ளார். அந்த வகையில் வள்ளியம்மானையில் அணிப்பிரயோகம் – ஓர் ஆய்வு என்னும் இவ்வாய்வானது முருகன் வள்ளி திருமணக்கதையை புலவர் உவமை, உருவகம் என்னும் அணிகளைக்கையாண்டு எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை பகுப்பாய்வு நோக்கிலும் விபரண நோக்கிலும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.

ஆய்வு முறையியல் மற்றும் தரவு சேகரிப்பு முறை:

வள்ளியம்மானையில் புலவரின் கவியாற்றல் அணிகளின் வாயிலாக எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை பகுப்பாய்வு நோக்கிலும் விபரண நோக்கிலும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது. இதற்கு முதநிலைத் தரவாக வள்ளியம்மானை ஓலைச்சுவடியும் இரண்டாம் நிலைத்தரவாக ஏட்டுச்சுவடிகள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வின்உள்ளடக்கம்

வள்ளியம்மானைகாப்புச் செய்யுள் உட்பட 4000- 4800 வரையிலானவரிகளைக் கொண்டமைந்துள்ளது. இதில் முருகன்குறமகளான வள்ளியை ஆட் கொண்டு திருமணம் செய்த கதையைப் புலவர் சிறப்பான அணிகளின் மூலம் வாசிக்கும் மக்கள் மத்தயில் இலக்கியச் சுவையை ஏற்படுத்தியுள்ளார். அந்தவகையில் இவ்வள்ளியம்மானையில் பின்வரும் அணிகள் கையாளப்பட்டுள்ளன.

1. உவமையணி
2. உருவகம்
3. உயர்வுநவிர்ச்சி

## 1. உவமையணி

முருகன் மற்றும் திருமணக் கதையைப் புலவர் சிறப்பான உவமையணிகளைக்கையாண்டு வெளிப் படுத்தியுள்ளார். அந்த வகையில் முருகன் அமரர்களின் துன்பங்களைத்தீர்க்க அசுரர்களின் மீதுகோபம் கொண்டு அவர்களைத் தாக்கியதைப் புலவர் சிறந்த உவமையணி மூலம் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது புலிபசுவின் மீதுகோபம் கொண்டு அதைத்தாக்கு வதைப்போன்று முருகன் அசுரர்களைத் தாக்கியுள்ளார்.

'ஆவை நாடிச்சினந்து ஆன புலி பாய்ந்தாற் போல்

அரக்கர்குலம் வேரறுத்து அமரரிடுக்கன் தீர்த்து'

(வள்ளியம்மானை 111-112 வரிகள்)

வள்ளியம்மன் வளர்ந்ததும் தினைப்புனம் காவல் காப்பதற்குரிய காவற்குடியை உருவாக்குவதற்கு குறவர்கள் போருக்குச்செல்லும் படையைப் போன்று அணி திரண்டு செல்கின்றனர். இதனை பின்வரும் வரிகள் வெளிப்படுத்தியுள்ளன.

'சேனைத்திரள் போல சென்று குறவர் கூடிச்

சந்தணத்தூண் வெட்டிச் சதுரமொக்கக்கால் நாட்டிச்'

(வள்ளியம்மானை 261-262 வரிகள்)

வள்ளி தினைப்புனத்தில் தானும் ஒரு பறவையினம் போலக் காட்சியளிக்கின்றாள். அதாவது வள்ளியை பறவைக்கு உவமித்துள்ளார் புலவர்.

'கோதை புனத்திற்குருகினம் போலேயவள் தான்'

(வள்ளியம்மானை 300 வரி)

வள்ளியின் அழகு சிறந்த உவமையணின் வாயிலாகப்புலவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. அந்த வகையில் புலவர் வள்ளியின் முகத்தை வளரும் சந்திரனுக்கு உவமித்துள்ளார்.

'வளர்மதி போலமுகம்' (வள்ளியம்மானை 317 வரி)

வள்ளியின்வயிற்றினை ஆலமரத்தின் இலைக்கு ஒப்பிட்டுள்ளார். அதாவது ஆலமரத்தின் இலையைப் போன்று சிறியவயிற்றினை உடையவள் என்பது வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அதைப்போன்று ஆலந்துளிருக்கும் புலவர் உவமித்துள்ளார். முறையே

'ஆலிலை போற் சிறுவயிறும்' (வள்ளியம்மானை 324 வரி)

'ஆலந்துளிர் போலந்ததிருவயிறும்' (வள்ளியம்மானை 609 வரி)

வள்ளியின் இருதொடைகளையும் குட்டிஈணாதவாழைத்தடங்களுக்கு உவமித்துள்ளார் புலவர்.

'ஈணாதவாழைத்தடம் போலிருதுடையும்' (வள்ளியம்மானை 326வரி)

வள்ளியின் புறங்காலைப் புத்தக்திற்கும், சிறிய அடியை சிவந்த தாமரைமலருக்கும் உவமித்துள்ளார் புவலர்.

'புத்தகத்தைப்போல புறங்கால் வடிவழகும்

செந்தாமரை போல சிற்றடியும்' (வள்ளியம்மானை 426-427 வரி)

அதே போன்று நெற்றியைவானத்தில் எழுந்தசிலைக்கு உவமித்துள்ளார். இதனைபின்வரும் பாடல் வரி மூலம் அறியலாம்.

'வானமதிலேயெழுந்தமானார் சிலை நுதலும்' (வள்ளியம்மானை 577 வரி)

வள்ளியிள்வயிற்றில் உள்ளரோமத்தைமெழுகிற்கு உவமித்துள்ளார் புலவர்.

'உந்திச்சுளியில்ரோமம் மெழுகது போல்' (வள்ளியம்மானை 589 வரி)

மேலும் வள்ளியின் உடலழகு பின்வரும் வரிகளினூடாக உவமையணி மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

'காமனுக்கு வாய்த்தமுடி போற்கனதனமும்

காந்தமலர்க்களையும் களை போலிருதோளும்'

'களைமுகில் போலக் கவிழ்ந்தகருங்கூந்தல்

காற்றுப்போல் பாசக்கயிற்றால் மிகவீசும்

கூற்றுவனை வெல்லுங்குணால் விளியிரண்டும்' (வள்ளியம்மானை 758-759, 763-765)

முருகன் எப்போதும் வாடாமல் பெரியதுளிர்ந்தமரமாகநின்றார் என்பதை பின்வரும் உவமையணி வெளிப்படுத்தியுள்ளது.

'மாந்துளிர் போல் மேனிவாடாமலுன்னுடனே' (வள்ளியம்மானை 1127)

முருகன் வள்ளியை இணைபிரியாது சேர்ந்திருப்பதற்கு உவமையாக தசையிலுயிர் போன்று இணைந்திருப்பதைப் புலவர் வெளிப்படுத்தியுள்ளார்.

'தசையிலுயிர் போல்' (வள்ளியம்மானை 1436)

முருகப் பெருமான் நீர்த்தடாகத்தில் தவறிவிழுந்துதத்தளித்து மிதந்ததைதவளை மிதந்ததைப் போன்று உள்ளதாக புலவர் வெளிப்படுத்தியுள்ளார்.

'தவறிவிழுந்தவரும் தவளை போலே மிதந்தார்' (வள்ளியம்மானை 1665)

வள்ளியம்மையானையைப் பார்த்து பயந்துதுன்புற்றதைப் பட்டறுத்தமான் போல என்னும் உவமையணி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

'பட்டறுத்தமான் போல' (வள்ளியம்மானை 1871)

வள்ளியம்மையானைணைப் பார்த்துமயங்கிதுன்புற்றிருந்த வேளையில் முருகனாகியவயோதிபர்யானையிடம் இருந்து வள்ளியம்மையைக்

காப்பாற்றாமல்கர்வமாகப் பேசியவார்த்தையைக் கேட்டு வள்ளியம்மை எரியும் நெருப்பில் உருகும் மெழுகுபோல் காணப்பட்டார்.

'எரியும்கனல் தனிலே உருகுமெழுகது போல்' (வள்ளியம்மானை 1881)

வள்ளியம்மை முருகனோடு சென்றுள்ளதை அறியாமல் குறவர்கள் வள்ளியைக் கண்டதும் அவர்கள் அதிககோபம் அடைந்துள்ளதோடு அவர்களின் கண்கள் குண்டு போற்சிவந்துள்ளதாகப் புலவர் கூறியுள்ளார்.

'குண்டு போற் கண் சிவந்து கொள்ளக் குறவரெல்லாம்.' (வள்ளியம்மானை 3343)

முருகனோடு சண்டையிட்டு குறவர்கள் எல்லாம் பஞ்சியைப்போன்று உடல்கள் சிதறி விழுந்துள்ளதாகப் பாடியுள்ளார்.

'பாறு பஞ்சி போல பறக்கலுற்றார்' (வள்ளியம்மானை 4027)

இவ்வாறு முருகன் மற்றும் வள்ளியின் திருமணக்கதையை உவமையணிகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

**2**. உருவக அணி

வள்ளியின் அழகினை உருவக அணியைப் பயன் படுத்தி புலவர் வெளிப்படுத்தியுள்ளார். அந்தவகையில் வள்ளியின் விளியை வேலுக்கு உவமித்துள்ளார். அதே போன்று பாதத்தைமலருக்கும் வள்ளியின் வார்த்தையை தேனுக்கும் உவமித்துள்ளார். இதனை முறையே

'வேல்விளியாள்' (வள்ளியமான்னை 266)

'மலர்ப்பாதம்' (வள்ளியமான்னை 387) என்பதன் மூலம் அறியலாம்.

## ஆய்வின் முடிவு:

பொதுவாக ஏட்டுச்சுவடியின் ஆசிரியர் இவர் தான் என்று உறுதியாகக் கூறமுடியாத நிலையில் இவ்வள்ளியம்மானை ஏட்டுச்சுவடியை எழுதியபுலவர் ஒரு கல்வி அறிவு குறைந்த புலவர் என்பது இவ்வள்ளியம்மானை ஏட்டுச்சுவட்டின் குறிப்பில் இடம் பெற்றுள்ளதனூடாக அறியமுடிகின்றது. இப்புலவர் அதிகளவில் உவமையணியையே பயன் படுத்தியுள்ள தோடு உருவக அணியை ஓரிரு இடங்களிலும் பயன்

படுத்தியுள்ளார். ஆகவே கல்வி அறிவு குறைந்த புலவரின் கவியாற்றல் இவ்வள்ளியம்மானையில் சிறப்பாக இடம் பெற்றுள்ள தென்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

## உசாத்துணை நூல்கள்

1. வள்ளியம்மானை ஓலைச்சுவடி

2.முத்துச்செல்வன்,ஜெ. ,2013,ஓலைச்சுவடிஅறிமுகமும்பாதுகாப்பும்,NoolahamFountation.

3. உவமையணி, https://store.tamillexicon.com.

© 2020, IRJTSR 